விலை சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 25 றவி. அவ் 12 இதழ் 328
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-1-82

# ரூ. 1,00,000 கொள்ளை!

(நமது நிருபர்
எம். எஸ். துரைராசா)

தொலைபேசித் தொடர்புகளைத துண்டித்து விட்டு சைக்கிளில் வந்த நால்வர் வீட்டில் இருந்த இளம்பெண்களைத்துப் பாக்கி, கத்தி முனைகளில் பயமுறுத்தி சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், வீட்டிலிருந்த பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்!

இச்சம்பவம், யாழ்.பல்கலைக் கழகத்துக்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள திருமதி கனகம்மா குமாரசாமி என்பவரது வீட்டில் நேற்றுமுன்தினமிரவு ஒன்பது மணியளவில் நிகழ்ந்தது.

சுமார் 9 மணியளவில் சைக்கிளில் வந்த நான்குபேர் தொலைபேசி தொடர்புகளைத் துண்டித்த பின்னர் கத்தி, துப்பாக்கி சகிதம் வீட்டுக்குள் திடீரெனப் பிரவேசித்து கதவுகளைப் பூட்டிவிட்டு அங்கிருந்த ஒன்பது இளம்பெண்களையும், ஒரு சிறுவனையும் துப்பாக்கி, கத்தி போன்ற ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்திஎல்லோரையும் நடு அறைக்குள் கொண்டு வந்து அவர்கள் அணிந்திருந்த தாலிக்கொடிகள், தங்கச்சங்கிலிகள் காப்புகள், காதுத் தோடுகள் போன்ற நகைகளையும் வீட்டில்இருந்தவானொலி, காமரா போன்ற பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றனராம்.

வீட்டுக்காரர் உத்தரவு பெற்ற நகை அடைவு பிடிப்பவர்கள் என்ற காரணத்தினால் கொள்ளையர்கள் அங்கிருந்த இரும்புப்பெட்டியையும் உடைக்க முயன்றனரென்றும் அந்த நேரத்தில் வீட்டின் வெளியில்

(6ம் பக்கம் பார்க்க)

★ யாழ். ப. நோ. கூ. சங்க ஊழியர்

# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

## சமரசப் பேச்சுக்களில் அமிர், ஆலால், சிவா

(நமது நிருபர்
ஏ. வி. மாணிக்கம்)

**யாழ்.கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினர் மேற்கொண்ட வேலைநிறுத்தம் சமரசப் பேச்சுவார்த்தையின் பின்னர் நேற்றிரவு கைவிடப்பட்டுள்ளது.**

யாழ், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர், தொழிற் சங்க ஊழியர்கள், கடந்த திங்கட்கிழமை முதல் வேலை நிறுத்தம் மேற்கொண்டிருந்ததுடன்,தொழிற்சங்கத்தலைவர் திரு, எஸ். எஸ். மனோகரன் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் இருந்துவந்தது தெரிந்ததே.

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். எம். பி.திரு.வெ யோகேஸ்வரன், வேலை நிறுத்தம் செய்த ஊழியர்களைச் சந்தித்து சமரசப் பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடொன்றுக்கு ஒழுங்குசெய்தார்,

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், த. வி, கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி., யாழ். எம், பி. திரு. வெ. யோகேஸ்வரன், வட்டுக்கோட்டை எம், பி. திரு. தா. திருநாவுக்கரசு, யாழ். ப.நோ. கூ. ச. தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் எம். பி. யாழ். மாநகர முதல்வர் திரு, இராஜா விசுவநாதன், உதவி முதல்வர் திரு. எஸ். அலோசியஸ், தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா, ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பேச்சு வார்த்தையின் போது வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் சங்கச்செயலாளர் திரு. இ. லோகநாதனை உடனடியாகத் திரும்பவும் வேலைக்கமர்த்துவதுடன்; இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரித்து பின்னர் நடவடிக்கை எடுப்பதென்றும;

சங்கப் பொதுமுகாமையாளர் இ. யேசுதாசனுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்து 2 மாதத்துக்குள் நடவடிக்கை எடுப்பதென்றும்;

வேலைநிறுத்தம்செய்த ஊழியர்களுக்கெதிராக எதுவித பழிவாங்கல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட மாட்டாதென்றும் பேச்சுவார்த்தையின் போது முடிவுசெய்ததைத்தொடர்ந்து ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை வாபஸ்பெற்றுக் கொண்டனர். (மா)

## லண்டன் ஆயர் யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

கனடாவிலுள்ள ஒன்டோரியோ மாகாணத்தின்லண்டன் நகர ஆயர் பேரருட் பெருந்தகை கலாநிதி ஜோன் எம். சேர்லொக் நாளை ஞாயிற்றுக்

(6ம் பக்கம் பார்க்க)

## சுங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் கடலில் நனைந்த பிடவைகள் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் 11—1—82 காலை 10 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954—ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி வெளியிடப்பட்ட 10675 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1 ம் பிரிவு 2 ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**1. நனைந்த வோயில் சேலைகள்**

**எஸ். எம். ஜே. சேனரத்ன**
சுங்க சேகரிப்பாளருக்காக
யாழ். மாவட்டம்

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5—1—82.

1911

தமிழாராய்ச்சி மாநாடு:

# உயிரிழந்தவர்களுக்கு நாளை அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவதுஅனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போதும் ஏனைய சம்பவங்களிலும் உயிரிழந்த 9 பேருக்கும் நாளைக்காலை ஏழுமணியளவில் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

யாழ். முற்றவெளியில் நிறுவப்பட்டுள்ள ஒன்பது நினைவுச்சின்னங்களுக்கும் இந்து ,கிறிஸ்தவ, இஸ்லாமிய மதவழிபாட்டுப் பிரார்த்தனை இடம் பெறும்.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுச்சின்னங்களின் முன்னிலையில் நாளைக் காலை ஏழு மணிக்கு யாழ். மாநகரமுதல்வர் திரு,இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறும் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம்.பி. திரு. எம்.சிவசிதம்பரம், யாழ். அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா, யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்,கோப்பாய் எம். பி. திரு. மு.ஆலாலசுந்தரம் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவார்கள்.

யாழ். மாவட்டத்துக்குள்

# பட்டாசு கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது!

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்மீது யாழ். மாவட்டத்திற்குள் பட்டாசு வெடிவகைகள் கொண்டுவருவதோ, தயாரிப்பதோ, அவற்றை விற்பனை செய்வதோ அல்லது கைவசம் வைத்திருப்பதோ மறு அறிவித்தல்வரை தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் இது சம்பந்தமான செய்தி வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே. (மா)

## நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பொலிஸ் பகுதியிலுள்ள வீடொன்றில் துப்பாக்கி சகிதம் புகுந்த நால்வர் நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றை நேற்றுக்காலை கொள்ளை அடித்துள்ளனர். (மா)

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது


(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த யாழ். கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். மனோகரனுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று மாலை 6.45 க்கு பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தைமுடித்துவைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திரு. மனோகரன் உண்ணாவிரதம் ஆரம்பித்து நான்கு நாட்கள் இருந்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும், ஈழமாணவர் பொதுமன்றத்தினரும் நேற்று உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

திரு. மனோகரன் நேற்றிரவு விடுத்த செய்தியில், தம்முடன் ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி கூறியதுடன், எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், வேலைநிறுத்தத்தை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவர ஒரே நாளில் எடுத்த முயற்சியையும் பாராட்டியுள்ளார். (மா)



உண்ணாவிரதமிருந்த திரு. எஸ். எஸ். மனோகரனை இங்கு காணலாம்.

மணிவாக்கு

மலமில்லை பாசில்லை மானுபிமானங்கள் குலமில்லை கொள்ளும் சணங்களுமில்லை நலமில்லை நந்தியை ஞானத்தினாலே பல மன்னி யன்பிற் பதித்து வைப்போர்க்கே.

— திருமந்திரம்

# நமது நோக்கு

## 'கடத்தல்' கட்டுப்பாடு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கடல் இருக்குமட்டும் 'கடத்தல்' என்பது முற்றாக ஒழித்துக் கட்டக்கூடியவிடயம் அல்ல.

'கடத்தல் பேச்சுகளில் ஈடுபடும் இவ்விரு நாடுகளின் உயர் அதிகாரிகள், சுங்க இலாகாக்களின் திறமைசாலிகள் இதனை அறியாமலில்லை; ஆனால் இதனை உணர்வதற்குப் புலமைவேண்டும்.

நாமறிந்த முதற் கடத்தல் சம்பவம் வல்வெட்டித் துறையிலிருந்து நாகபட்டினம் கொண்டுசென்ற பொருள் எதுவும் அல்ல, சரித்திரமோ, இதிகாசமோ எதுவானாலும் அது பரிகாசத்துக்குரிய பொருளல்ல, இலங்கை மன்னன், சிவபூசாதுரந்தரான இராவணன் சீதாபிராட்டியை இலங்கைக்குக் கொண்டு வந்த சரித்திரம், இராவணனா இராமரா இந்தக் கதைக்குக் கதாநாயகன் என்ற பெரும் பிரச்சினையைக் கிளப்பியது.

இவ்விருவரும் தத்தம் துறையில் அசாதாரண ஆற்றல் பெற்றவர்கள். கடத்தல்பொருள் சீதாபிராட்டியானாலும் இவ்விருவருக்குமிடையே நடந்த சமர் ஆண்மையின் பெருமையையும் அறத்தின் வலிமையையும் நிரூபிக்கின்றது.

எனவே இவ்விரு அண்டை நாடுகளுக்கிடையே தாயும், சேயும் போன்ற இவ்விரு நாடுகளுக்கூடாக இன்று முழுமூச்சாக நடைபெறும் உயர்மட்டக் கடத்தல் சம்பவங்கள் சாதாரண நடவடிக்கைகளால் காலத்துக்குக்காலம் நடைபெறும் பேச்சுவார்த்தைகளால் கட்டுப்படுத்தக்கூடியவை யல்ல

படமாளிகைகளுக்கு 'அள்ளுப்படும்' பாமரமக்கள் காதல்மன்னரைப் பற்றிப் பேசிப்பொழுது போக்கினகாலம் ஒன்றிருந்தது. சாதலை இறுதியாகக் கொண்ட பல காதற்படங்கள் 'பட்டினி' மனங்களுக்குப் பசியாற்றின.

இன்று காற்று மாற்றத்தால் கடத்தல் மன்னர் பற்றி உயிர்ப் படங்களைப் பார்த்தும் சாதல் முடிவாகக் காணப்படும் கடத்தல் 'மன்னரை' வியந்தும் மக்கள் காலம் கழிக்கின்றனர்.

பூனைக்குக் கொண்டாட்டமானாலும் இவ்விரு நாடுகளின் அரசுகளுக்கு இது திண்டாட்டமாகவே இருக்கின்றது.

இலங்கை அரசைப் பொறுத்தளவில் கடத்தல் என்ருல் வடக்கிலுள்ள 'வீ.வீ.ரி.' என்றும், தமிழகத்தில் நாகபட்டினம் என்றும் சொழும்புப் பத்திரிகைகள் ஒற்றைத் தாளம் போடுகின்றன

மானிட சாமர்த்தியம் நல்லெண்ணை வளம் படைத்த வடக்கில் தானுண்டு; தமிழ் மக்களின் தனிச்சொத்தென்பது அக்கரையும் தமிழகமாகவே இருக்கிறதால் நிரூபிக்கப்படுகின்றதென்று, தமிழ்மக்கள்தானும் இறுமாப்புக் கொள்வது உண்டு; இது இன்று அருகி வருகின்றது.

இன்று பயங்கரவாதம் என்ருல் அது வடக்கில் என்று நினைக்குமாப்போல் அன்று ''வீவீரி'' என்ருல் கடத்தல், கடத்தல் என்ருல் 'வீவீரி' என்று தென்பகுதி கருதப்பட்டது.

அண்மையில் கடத்தலுக்கும் பயங்கரவாதத்துக்கும் ஒற்றுமை கண்டுபிடிக்கும் 'வீண் முயற்சியில்' அதிகாரிகள் கவனஞ்செலுத்திய போது பல சர்வதேச கடத்தல் பொருட்கள் இலங்கைக்கூடாக இந்தியா கடந்து வேற்று நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

என்ருே எவ்விடயத்திலும் புதிய ஞானம் உதயமாவது நிச்சயம். இன்று நீர்கொழும்பிற்கும் தூத்துக்குடிக்கும் இடையில் பாதை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது; இதுமட்டுந்தானா? பாணந்துறை, களுத்துறை, மாத்தறை போன்ற இடங்கள் கடத்தலுக்கு உகந்த இடங்களல்லவா?

தமிழகத்தில் 'கருணை வெள்ளமெனத்தவிசில் வீற்றிருக்கும்' திருச்செந்தூர், தில்லை நடராஜனின் உறைவிடமாகிய சிதம்பரம், பாரதியாரின் வசிப்பிடமாகிய பாண்டிச்சேரியெல்லாம் கடத்தல் இடங்களாகக் கணிக்கப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தைகளில் அடிமட்ட உண்மை, தென்படுவதில்லை; தெரியாத விடயமென்றல்ல; 'மன்னர்கள்' எத்துறையிலும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவை; கடத்தல் 'மன்னர்கள்' மாளிகையில் வீற்றிருப்பர்; அவர்களின் ஏவலாளர்களே இம்மாபெரும் 'களவில்' ஈடுபடுபவர்கள். ஆற்றல், அனுபவம், உயிரையே தியாகம் செய்யும் திடம் உள்ள 'பேர்வழிகள்' இதனை நடத்தி வருகின்றனர்.

நாடுகளின் சுங்கப்பகுதியினர் எல்லோரும் ஊழலுக்குட்பட்டவர் அல்லர்; எத்தனையோ பெரிய 'களவுகளைக்' கையும் மெய்யுமாகப் பிடித்திருக்கின்றனர். ஆனல் இவையெல்லாம் மொத்தத்தில் 10 சதத்துக்குக் குறைந்தவையே என்று தமிழக சுங்கஇலாகா கொலெக்டர் கருதுகிருர்.

எனவே கடத்தலைஒழிக்க, பயனற்ற பேச்சுவார்த்தைகளை ஒழித்தல் நலம், திறமையும் நேர்மையும் தேசபக்தியும் நிறைந்த அதிகாரிகள் தேவை. கற்புக்குச் சாவித்திரியைப் போன்ற பெண்கள்போல் இவ்வித மனிதர் இல்லாமலில்லை. வடக்கு, தெற்கு என்ற நியாயமற்ற பாகுபாடில்லாமல் தொழிற்படும் நிர்வாகம் தேவை; எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை இந்திய நட்புறவு தூய்மையானதாக மிளிரவேண்டும்.

திருவெம்பாவை சிந்தனை – 10

# திருவடியே திருவருள்

மார்கழி மாதம் பக்திக்குரிய சிறந்த மாதமாக வழக்கத்தில் வந்துள்ளது. கோல் தேடியோடும் கொடிபோல நாமும் பழைய வழக்கத்தை நாடி இந்த மாதத்தில் எம் பக்திப் பரவத்தைப் பழகிக் கொள்கிறோம். அதிகாலையில் நீராடித் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு மீள்பவரின் உடம்பிலும்முகத்திலும்உள்ளத்திலும் எத்துணை பூரிப்பு பக்தியுடன் ஞானப்பாடல்களையும் கேட்டுகந்த உள்ளம் இறும் பூதடைகிறது. நெஞ்சம் நெக்குருகுகின்றது. இந்த மாதத்தில் திருவெம்பாவைக் காலத்து வழிபாட்டினல் அகம்பாவம் குறைந்து விடுகிறது, உலகத்துக்குக்கருத்தாவான சிவபெருமானை ஆதிபகவான் என்றும் உலகுக்கெல்லாம் வித்து என்றும் எல்லா உலகும் ஆனவன் என்றும் மணிமிடற்று எண்கையன் என்றும் பிறவாக்கைப் பெரியோன் என்றும் போகம் ஈன்ற புண்ணியன் என்றும் நுதல்விழி நாட்டத்து இறையோன் என்றும் இன்னுப பல வாருகவும் பெரியர்வர்கள் போற்றுவர்.

இளமையில் நம்பா திருந்தமைக்கு முதுமையில் பச்சாத்தாபப்படுகிருர்கள். மார்கழி நீராடி வழிபாடு செய்வதால் என்றுமில்லாத இன்பம் நம்பால் எய்தும் அன்பு, அருள், தெய்வ உணர்ச்சி மிகுதியாக உண்டாகும். மனித வாழ்வு கடவுளியலை விட்டு வேருக அமைவதில்லை.

வழிபாட்டில் முக்கியமான ஓர் அம்சம் கட்புல அடக்கம். ஐம்புல வேடரில் கண் அடங்கினல் மற்றவை அடங்கும் எனவே கண்ணின் பாவையை நோக்கி எம்பாவாய் இதை உனக்காகக் கூறுகிறேன். ஏல் எனப்பாடுகிறது. ஏரோரெம்பாவாய் ஒன்று பாடல்கள் தோறும் வருகின்றது.

முன்னர் பதஞ்சலி, வியாக்கிரபாதர், பின்னர் சமயகுரவர் நந்தனூர் சந்தான குரவர், அப்பைய தீட்சதர், கோபால கிருஷ்ணபாரதியார், முத்துத் தாண்டவர் முதலானேர் சிதம்பரத்தில் அன்று கண்டனுபவித்தவற்றை நாம் இன்று கண்டு களிக்கிறோம். ஆனந்த நடனப் பிரகாசம் சித்சபேசம் சிவானுபூதி பெற்ற திருவாதவூரடிகள் தம்முடைய பழைய உயிர்த்தன்மையாவும் கெட்டு சிவனுந்தன்மை யென்னும் சிவபாவத்தையடைந்தார். ''முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல் வேனைப் பத்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கியெனை யாண்ட அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே'' என்று அதிசயப்படுகிருர்.

(5ம் பக்கம் பார்க்க)

**க. சி. குலரத்தினம்**

இறைவன் படைப்பாகிய இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நமக்குத் திருவருள் இன்றியமைதாதது, திருவருளைப் பெற்று உய்தியடைவதற்கே வழிபாடு அவசியமாயிற்று. வழிபாடு செய்வதற்கு நமக்குப் பெரியவர்கள் வழிவகைகளை உண்டாக்கிப் பாரம் பரியத்தைப் பழக்கியுள்ளார்கள். அந்தப் பாரம் பரியத்தை நாம் பிசக்காமல் பாழ்படுத்தாமல் எம்சந்ததியினருக்குப்பழக்குதல் வேண்டும். உலகில் உயிர்கள் ஒரு குறையுமில்லாமல் வாழ வழிவகுப்பதே திருவெம்பாவை. திருவெம்பாவையில் நீராடுதல் நோன்பின் முதற்படியாகச் சொன்ன பாடல்களுள் ஒன்பதாவது பாடல் நீராடும் போது எடுத்துக்கொள்ளவேண்டிய சங்கற்பத்தைக் கூறுகின்றது. சங்கற்பம் இல்லாத செயலும் குறிக்கோளில்லாத வாழ்வும் பிரயோசனமில்லாதவை.

எமக்கு உடம்பினைத் தந்தருளிய இறைவனே எம் குற்றங்களை நீக்கிக் குணங்கள் அருளுவதற்குத் தாமாகவே எழுந்தருளி வருகின்ருர். இத்தகைய அற்புதங்களை நம்பாதவர்கள் பிற்சீவியத்தில் நம்புகிருர்கள்.

# மக்கள் கருத்து

## உண்ணுவிரதத்தை நிறுத்த உதவுங்கள்

யாழ்ப்பாணம் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க உறுப்பினர்கள் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தப்போராட்டம் புரிந்து வருகின்றனர். அதன் தலைவர் எஸ். எஸ். மனோகரன் செவ்வாய்க்கிழமை தொடக்கம் உண்ணுவிரதமிருக்கிருர்.

கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின் சீர்கேடுகளை சுட்டிக்காட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு தொழிற்சங்க செயலாளர் இரா. லோகநாதன் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக அவரை மீண்டும் வேலையில் அமர்த்தக்கோரி தொழிற்சங்கம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து வேலைநிறுத்தமும், உண்ணுவிரதப் போராட்டமும் தொடங்கப்பட்டதென அறிகிறோம்.

இன்றைய நிலையில், தமிழ் தொழிலாளி ஒருவர் உண்ணுவிரதமிருந்து, மூன்று நாட்களாக வாடும்போதும், ஏனைய தமிழ் ஊழியர்கள், அவசரகாலச் சட்டத்தின்கீழ் வேலை இழக்கும் பரிதாபநிலை உருவாகும்போதும், தமிழ்த்தலைவர்களும், தமிழ் பா. உ.க்களும், பார்த்துக்கொண்டிருப்பது சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

கூட்டுறவுச் சங்க நிர்வாகமும், தமிழ் பா. உ.க்களும், இப்பிரச்சனையை உடனடியாகத் தீர்த்துவைக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

**எஸ். பி கிருஷ்ணன்**

## யாருக்காக இந்த தபால்நிலையம்?

காரைநகர் பிரதான தபால் நிலைய கட்டுப்பாட்டின் கீழ் ஐந்து உபதபால் நிலையங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன. இவற்றில் 5 9 1949 இல் களபூமி உபதபால் நிலையமும் 1 10-1949 இல் கோவளம் உபதபால் நிலையமும் 2-11-1959 இல் வலந்தலை உபதாபல் நிலையமும் 1 6 1960 இல் வியாவில் உபதபால் நிலையமும் 14 7-72 இல் காரைநகர் துறைமுகம் (Jetty) உபதபால் நிலையமும் உருவாக்கப்பட்டன.

காரைநகர் துறைமுகம் உபதபால் நிலையம் பாலாவோடை துறைமுகம் தோப்புக்காடு இராசாந்தோட்டம் பலுகாடு போன்ற இடங்களிலுள்ள மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. இவ் உபதபால் நிலையத்திற்கு தொலைபேசி வசதியும் உள்ளது.

மேற்படி துறைமுகம் உபதபால் நிலையத்திற்கும் களபூமி உப தபால் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் முக்கால் மைலாகும். இருந்தும் களபூமி உபதபால் நிலையம் பெயரளவிலே ஒழிய சேவையில் விளானை என்னும் குறிச்சி மக்களுக்கே சேவை புரியக்கூடியதாக இருக்கிறது. இவ்உபதபால் நிலையம் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் களபூமி மத்திய இடத்திற்கு அண்மித்து இருந்தது. பின்னர் கட்டிடப்பிரச்சினை காரணமாக இடம் பெயர்ந்து தபால் நிலைய அதிபரின் வீட்டில் அமர்த்தப்பட்டது.

களபூமி உபதபால் நிலையம் அமைய வேண்டிய இடம் களபூமி பிள்ளையார் கோவிலடியாகும். மேற்படி இடத்தில் இவ்அலுவலகம் அமருமிடத்து களபூமி சத்திரந்தை, காப்பிட்டியந்தனை, பொன்னவளை திக்கரை தன்னை ஊரி, வளுப்போடை போன்ற

(5 ம் பக்கம் பார்க்க)

## பொன்மொழிகள்

தீமைகள் என்பது மூடனுக்கு விளையாட்டு தீமைகள் புரிவது அறிவுணர்ச்சியுள்ளவனுக்கோ ஞானம்.

(பைபிள்; நீதிமொழிகள் Proverb 10 — 23)

கேட்டிலும் உண்டோர் உறுதி

— குறள்

தீமையிலும் நன்மை கலந்திருக்கிறது, மனிதர் அதனை வடித்தெடுக்கும் ஆற்றலும் அவதானமும் உடையவர்களானல்

— ஷேக்ஸ்பியர், ஹென்றி V

**குறிப்பு:**

உலக மகா நூல்களில் எடுக்கப்பெற்ற பொன்மொழிகள் ஒரே வித கருத்துடையவை. பைபிளிலிருந்து எடுக்கப்பட்ட முதலாவது நீதிமொழி 'மணிவாக்கு' என்று எங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. வாசக அன்பர் ஒருவர் அது குறித்து சந்தேகம் கிளப்பியதால் இம்மூன்று மணிகளையும் ஒரு மாலையாக் கோத்திருக்கிறோம்.

ஆ — ர்

# "கல்வித் திட்டக்குறைபாட்டால் மாணவர் திசைதப்புகிறார்கள்"

## காரை. மணிவாசகர் விழாவில் பேராசிரியர் இராமகிருஷ்ணன்

(காரைநகர்)

"பல ஆண்டுகளுக்கு முன்னர் எமது சமுதாயம் ஆன்மீகத்துறையில் மிக முன்னணியில் திகழ்ந்தது. மக்கள் எல்லோரும் சமய நூல்களைப் படிப்பதில் அதிக ஆர்வங் காட்டி வந்தனர். பழைய பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டன. சைவர்கள் மத்தியில் ஒற்றுமை காணப்பட்டது. அக்காலக்கல்வி ஆத்மீகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கற்றதனலாய பயன் கடவுளை வழிபடுதலே என்ற வள்ளுவர் வாக்கை மக்கள் மதித்து ஆலய வழிபாட்டில் மிகுந்த கவனஞ்செலுத்தினர். அவர்கள் திருவருளுக்கு இலக்காக வாழவேண்டுமென்ற பெருநோக்குடையவர் களாகக் காணப்பட்டனர். செல்வத்தைத் தேடுதல்தான் வாழ்க்கையின் முடிந்த முடிவு என்ற நோக்குடன் அவர்கள் வாழவில்லை. ஆனல் இப்போதுள்ள எமது கல்வித்திட்டத்திலுள்ள குறைபாட்டால் மாணவர்கள் திசைதிருப்பப்படுகிறார்கள்"

இவ்வாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசியபோது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மெய்யியற்றுறைப் பேராசிரியர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

மணிவாசகர் சபை உபதலைவர் திரு. மா. சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் தொடர்ந்து பேசுகையில் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது கல்வி இப்போது எமது கல்விச் சீர்திருத்தம் பற்றி ஆராயப்பட்டு வருகிறது. இவ்விஷயத்தில் மற்றைய சமூகத்தினர் மிகுந்த கவனஞ்செலுத்தி வருகின்றனர். மகாநாடுகள் கூட்டி ஆராய்கின்றனர். ஆனல் எமது சமூகத்தினர் அதிக அக்கறை காட்டுவதில்லை. தமிழர்களை ஒன்றுசேர்ப்பது கடினம். அதிலும் சைவர்களை ஒன்று சேர்ப்பது மிகக்கடினம் என்பது பொதுவாக இருந்துவரும் அபிப்பிராயமாகும். வழிகாட்டுபவர்களைப் பின்பற்ற மக்கள் தயங்குகிறார்கள் என்றார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் உரையாற்றினார். (அ)

# "அருளாளர்கள் கடவுளை நேரில் கண்டனர்"

—பேராசிரியர் கனகசுந்தரம்

(காரைநகர்)

"நாம் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனது பாதங்களை அடைதலாகும் முதலில் நமக்குக் கடவுள் உண்டு என்ற நம்பிக்கை ஏற்படவேண்டும். மணிவாசகர் போன்ற அருளாளர்கள் கடவுளைக் கண்ணுற் கண்டவர்கள் மணிவாசகர் கண்ணல் யானும் கண்டேன் காண்க' என்று பாடியிருப்பதை நாம் கூர்ந்து சிந்தித்தல் வேண்டும் விஞ்ஞான ரீதியிலும் கடவுள் உண்டு என்ற கொள்கையை நிலைநிறுத்தலாம் என்று காரைநகர் மணிவாசகர் விழா முதல் நாள் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறைத்தலைவர் பேராசிரியர் இ. கனகசுந்தரம் குறிப்பிட்டார்.

சடையாளி வைரவர் கோவிலிருந்து புறப்பட்ட திருவாசகத் திருமுறை ஊர்வலத்துடன் விழா ஆரம்பமானது. பிற்பகல் 2 மணிக்கு பஜனைக் குழுவினருடனும் மேளவாத்தியத்துடன் ஆரம்பமான ஊர்வலம் 4 மைல் தூரத்தை தாண்டி மாலை 6 மணிக்கு ஈழத்துச்சிதம்பரத்தை வந்தடைந்து பெருந்தொகையான மக்கள் ஊர்வலத்திற் கலந்து கொண்டனர். மக்கள் நிறைகுடம் வைத்தும் அர்ச்சனை செய்வித்தும் திருவசகத் திருமுறைக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்தனர்.

சபைத்தலைவர் திரு. எஸ். ஆர். எஸ். தேவதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பௌராணிக வித்தகர் வ. குகசர்மா திருவாளர்கள் இ. வைத்திலிங்கம் கே. சிவதட்சணமூர்த்தி ஆகியோரும் பேசினர் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரின் இன்னிசை விரிவுரையும் நடைபெற்றது. (அ)

# வீதியில் விழுந்த ஹெலிகாப்டர்

## 4 பேர் பலி

மெல்போண், ஜன 8

டெலிவிஷன் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் நான்கு பேரை ஏற்றிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று வீதியில் விழுந்து நொறுங்கியதை அடுத்து டெலிவிஷன் குழுவினர் நால்வரும் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

விமானி படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் இது குறித்து விசேட அதிகாரிகள் குழு ஒன்று விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# "பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் வங்கிக்கிளைகள்"

(கொழும்பு)

மக்கள் வங்கி கிளைகளை புதிதாகத் திறக்கும்போது பொலிஸ் நிலையங்களுக்கு அருகிலேயே திறப்பதென்று மக்கள் வங்கியின் தலைமையகம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது,

பல இடங்களில் மக்கள் வங்கிக்கிளைகள் அமைக்கப்பட வேண்டிய தேவை இருந்தும் உத்தேச கிளைகளை அமைக்கும் இடங்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அப்பால் உள்ளதால் இதுபற்றி முடிவு எடுக்கப்படாமல் இருப்பதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

வங்கிகளில் அடிக்கடி இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களை தடுப்பதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகத் தெரிகிறது, (கு—இ)

# கடற்படை வாகனசாரதி பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடற்படைக்குச் சொந்தமான 'ட்ரக்' வாகனச்சாரதி ஒருவரை யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் அரை மணித்தியாலம் றிமாண்டில் வைத்து கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் 1500 ரூபா பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை சரவணை சின்னமடுவைச் சேர்ந்த கடற்றொழிலாளி பத்தன் சபாபதி (58வயது) என்பவர் யாழ். புகையிரத நிலையத்து சுற்றுவளைவில் தனது பெருமகளுடன் நின்றபோது கடற்படை ட்ரக் ஒன்றினல் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானர்.

மரண விசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் சாரதியை 1500 ரூபா பிணையில் செல்லுமாறும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டிருந்தார். யாழ். நீதிமன்றத்தில் 'ட்ரக்' வாகன சாரதி நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது நீதவான் ரி. ஜோகநாதன், அரை மணித்தியாலம் சாரதியை றிமாண்டில் வைத்து திரும்பவும் அவரை ஆஜர்படுத்தி பொதுசனங்கள், உட்பட துவிச்சக்கரவண்டிகள், கார்கள் போன்ற பல விதமான வாகனங்களின் நடமாடும் இடத்தில் உங்கள் அதிகாரத்தைப் பாவித்து போக்குவரத்துச் சட்டத்தை மீறி வாகனம் செலுத்தியிருக்றீர் இனிமேலும் இப்படி நடந்து கொண்டால் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படுவீர்" என்று கடுமையாக எச்சரிக்கை செய்து திரும்பவும் 1500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு மார்ச் 24ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (மா)

ரயில பயணிகளை பாதுகாக்க நடவடிக்கை

# ரயில் நிலையங்களில் பொலிஸ் நிலையங்கள்!

(கொழும்பு)

புகையிரதப் பிரயாணிகள் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாவதையடுத்து சகல புகையிரதங்களிலும் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படுவதோடு சில புகையிரதநிலையங்களில் பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன் மூலம் புகையிரதங்களில் பிரயாணிகள் தாக்குதலுக்குள்ளாவது, களவுகள் இடம்பெறுதல், கடத்தல் இவைகளைத் தடுக்கலாமெனப் பொலிஸார் நம்புகின்றனர்.

மாகோ, பொல்காவலை, கம்பஹா ஆகிய புகையிரத நிலையங்களிலேயே முதலில் பொலிஸ்நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை பாதுகாப்புப் படைப் பிரிவினர் புகையிரதங்களில் பிரயாணஞ்செய்து, கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடும் அதே நேரத்தில் தேவையேற்படும்போது சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்படுபவர்கள் கைது செய்யப்படுவார்கள். கைது செய்யப்படுபவர்கள் ரயில்நிலையங்களிலுள்ள பொலிஸ்நிலையங்களில் கையளிக்கப்படுவர்.

புகையிரதப் பாதுகாப்புப் பிரிவினரும் தப்பாசகி கையாளும் முறையில் பயிற்சிபெற்று வருகிறார்கள். இவர்களும் கூட்டாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். (கு)

# எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

மிருசுவில் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில், மிருசுவிலைச் சேர்ந்த வேலன் பாலசிங்கத்தைக் கொலை செய்ததாகவும், வேலன் துரைசிங்கத்தை அடித்துக் காயப்படுத்தியதாகவும் சி. சிவராசா சி. துரைசிங்கம், சி. சிவஞானம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜரானர்.

வேலன் துரைசிங்கமும், சாட்சிகளும் பல தவணைகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

# ரமணமகரிஷி ஜயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபகவான் ரமண மகரிஷின் 10 வது ஜயந்திவிழா நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் விசேஷ பூஜை, பிரார்த்தனை சொற்பொழிவுகளுடன் இரவு 7 மணிவரை நடைபெறவிருக்கிறது. (மா)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(டலோலி)

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 18 கழகங்கள் பங்கு பற்றுகின்றன. இறுதி நாளான 12ம் திகதி பரிசளிப்புவிழா நடைபெறும்.




# உற்சாகம் உழைப்பு ஊக்கம் ஆரோக்கியம்

தருவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகளும் சதா உழைக்கும்பெற்றோரும் ஆயாசமும், களைப்பும் தீர அருந்துவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ். உடலுக்கு உற்சாகத்தையும் மூளைக்குச் சுறுசுறுப்பையும் தருவது

# புரோட்டினெகஸ்

புரதச் சத்து நிறைந்த புரோட்டினெக்ஸ்
வாழ்க்கைக்குத் தருகிறது. ஆனந்தம், வலிமை, உற்சாகம்
புரதச் சத்து என்றல்
புரோட்டினெக்ஸ்
சொக்கலேட் ருசியுள்ள பானம்
புரோட்டினெக்ஸ்.
.50 கிரு. விலை ரூபா. 16.85




Pfizer

"ஏன் புரோட்டினெக்ஸ்"
த. பெ. 1362 கொழும்பு

ஏன் புரோட்டினெக்ஸ்
அருந்துகின்றீர்கள் என்பதை எழுதியனுப்பும் சிறந்த வாசகருக்கு கிழமை தோறும் புரோட்டினெக்ஸ் வழங்கப்படும்.

பெயர்: ____________

விலாசம்: ____________

அருகாமையிலிருக்கும் புரோட்டினெக்ஸ்
விநியோகஸ்தர்: ____________

திகதி: ________ கையொப்பம் ________

# பெண்களுக்கும் அரச உயர் பதவிகள்

## 250 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

அமைச்சுக்களின் செயலாளர்களாகவும், அரசாங்க அதிபர்களாகவும் பெண்களையும் நியமிக்க ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது.

பெண்களுக்கும் உயர் பதவிகளை வழங்குவது சம்பந்தமாக ஆராய்வதற்கென விசேட குழு ஒன்று அமைச்சரவைச் செயவாளர் திரு, ஜி. வி. பி. சமரசிங்கா தலைமையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

முப்பத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விசேட நிர்வாகப் பயிற்சியில் 10 வருடம் அனுபவமுள்ள பட்டதாரிப் பெண்களுக்கே மேற்படி உயர் பதவிகள் வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனவும் தெரியவருகின்றது.

நிர்வாக சேவையில் தமக்கும் உயர் பதவிகளை வழங்கும்படி சுமார் 250 பெண்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் பட்டதாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் மூறும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

இந்நியமனங்கள் சம்பந்தமான பட்டியலைத் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் திரு. விக்கிரமவீரசூரிய விரைவில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவிருக்கிறார் (கி)

# தென்னைவள உற்பத்திக்கு ஊக்குவிப்பு

(புலோலி)

அம்பன் கமநலச் சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் தென்னைவள உற்பத்தியைஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அம்பன் கமநலச் சேவை நிலையம் மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்க தென்னை உரவகைகளை இந் நிலையம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் மூலமாக தென்னைச் செய்கையாளர்களுக்கு வழங்கிவருகின்றது.

5 வது மகளிர் வாரம்
ஹரன — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

# விருந்தளித்துக் கௌரவிப்பர்

(அரியாலை)

இலங்கைக்கு விஜயஞ் செய்திருக்கும் கலாநிதி டேவிட் பீற்றேருவுக்கும் அவரது பாரியார் திருமதி யூன். பீற்றேருவுக்கும் யாழ். பரியோவான் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் இம்மாதம் 20ந் திகதி இரவு பீற்றேரு ஞாபகார்த்த மண்டபத்தில் இரவு விருந்தளித்துக் கொளரவிக்க விருக்கிறது.

கலாநிதி டேவிட் பீற்றேரு யாழ். பரி. யோவான் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் அருட்திரு ஹென்றி பீற்றேருவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

லிடோ யாழ். நகர்
தினசரி 10.30, 2.15, 4.45, 7.15, 9.30
DEATH DEMENSION

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

ராஜா (யாழ். நகர்) — சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்சர்
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் ... ராதிகா
நிறம் மாறுத பூக்கள்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]

இன்று 113 ஆவது வெற்றித்தினம்!
சாந்தி (யாழ். நகர்) தினசரி 10—30, 2—30, 6—15, 9—45
தொலைபேசி;7642
ஜனத்திரள் மத்தியில் 100 நாட்களுக்குமேல் பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன் மேஜர்— நடித்த
குரு (ஈஸ்ட்மன் கலர்)

Regal Cinema D ily 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
NOT NOW DARLING
(Sexy Comedy)

மனோரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

[illegible]
இன்று சினிமா காட்சிகள் இல்லை

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 25 ம் திகதி

சனிக்கிழமை

(9—1—82)

மேடம்: இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும் அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும் கலைஞர்கள் போற்றப்படுவார்கள் சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இடபம்: சிந்தனையில் ஒரு மாற்றம் தென்படும் நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். தொழில்துறையில் மறைமுக எதிர்ப்புக்களுக்கும் இடமுண்டு. முன்யோசனையுடன் நடக்கவும்.

மிதுனம்; விரக்திநிலை உருவாகும், வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

கடகம்: வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவிய இலாபத்தைக்கொண்டு வரலாம் வணிகர்கள் புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கு விரும்புவார்கள் நண்பர்கள் ஆதரவு கிடைக்கும்.

சிங்கம்: ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்குக்கும் இடமுண்டு இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும், பூமிப் பிணக்கினுல் வழக்கு விவகாரத்துக்கும் இடமேற்படும்.

கன்னி: ஆராய்ச்சிகளில்அதிக ஆர்வம் தோன்றும், வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவிற்கு இடமுண்டு, எளிதான பேச்சின்மூலம் எல்லோரையும் வசிகரிப்பீர்கள் தனச் சிறப்புக்கும் இடமேற்படும். சுபதினம்.

துலாம்: இதயத்தில்மகிழ்ச்சி வெள்ளம்பொங்கும் இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும். பொதுமக்களின் ஆதரவும் கிடைக்கும் சிலருக்கு எதிர்பாராத அதிஸ்ட லாபம் கிடைக்கலாம்.

விருச்சிகம்: தூரத்துசெய்தி ஒன்று துயரத்தில் ஆழ்த்தும்; பிணிக்கு இடங்கொடாது உடல் நலத்தை பேணவும் குடும்பத்தில் பிணி மனதிலே சுமை. அலைமோதும்வாழ்க்கை.

தனு: கற்கண்டு போல் இனிக்கும் வாழ்க்கை காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. களஸ்திரவழியின் மூலம் கனதனம் சேரக்கூடும் குறுமையான சம்பவம் இடம் பெறும். வாழ்க்கையில் 'சுமை தோன்றும்'.

மகரம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன் கையே தனக்குதவி என்று செயலாற்றவும்மறைமுக எதிரிகள் விசமத்தனங்களில் ஈடுபடுவார்கள். நிதானம் வெற்றியைத்தரும்.

கும்பம்: உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்பு தென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசன தலைமைக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர்.

மீனம்; புதியதொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிடைக்கும் சிறப்பான நாள்,

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இந்த ஆண்டில் உங்கள் பலன்

கே. என். நவரத்தினம்

### கும்ப ராசி

தத்துவ சிந்தனையுள்ள இந்த இராசிக்கு சனி செவ்வாய் 8ம் இடத்தில் இருப்பது சகலவிதத்திலும் நஷ்டங்களே உருவாக்கும். 9ம் இடத்தில் வியாழன் இவற்றிற்கெல்லாம் மேலாக பாதுகாப்பை வழங்குவார். 10ல் யூரேனஸ் தொழிலில் சீர்திருத்தங்களை வருட பிற்பகுதியில் உண்டாக்குவார். புத்திரர்களால் லாபமும் கல்வியில் முன்னேற்றமும் உள்ள வருடம்.

நோய்கள் உங்களைத் துன்ப சகாப்தத்தில் வீழ்த்த முயன்றாலும் வியாழ பகவான் கிருபையால் எல்லாம் நிவர்த்தியடையும். புத்திரகாரகன் வியாழன் 9ம் இடத்தில் இருப்பதால் குடும்பத்தில் நற்காரியங்கள் நடக்க வழிவகுப்பார். புத்திரர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள், தொழில்வாய்ப்புக்கள்கிடைக்கும், பணலாபங்கள் கிடைககும். உள்நாட்டில் மாத்திரமல்ல, வெளிநாட்டிலிருந்தும் பணவரவுகள் எதிர்பார்க்கலாம். இருந்தாலும் சேமிப்புகள்ஏற்படவழியில்லை. விவசாயிகள் மிகவும் மோசமாக பாதிப்படைவார்கள். சொத்துக்கள், கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட வருமானங்கள் திருப்திகரமாக அமையும். உத்தியோகத்துறையில் ஈடுபட்டு கடமை செய்வோருக்கு, அந்தஸ்து, சேவை, தொழில், வளர்ச்சி நன்றாகவேயிருக்கும். தனிப்பட்ட தொழில் தொடங்குவதற்கு மிகவும் சாதகமான காலம். தனிப்பட்ட தொழில் செய்வோர் வேறு தொழில்கள் தொடங்குவார்கள். நினைத்த கருமங்கள் எந்தவகையிலும் சாதிதுக்கொள்வீர்கள். குடும்ப வாழ்வில் அளவுக்கு மிஞ்சிய தொல்லைகள் ஏற்படும். காதல் வாழ்வில் தெய்வீக கடாட்சத்தால் வெற்றி கிடைக் ஆகஸ்ட் மாதத்தின் பின் வழிபிறக்கும். சேவையிலுள்ள பெண்கள் சகாக்களுடன் பிரச்னைகளுக்குள்ளானாலும், மேலதிகாரிகளினுல் கௌரவிக்கப்படுவீர்கள். மாணவர்கள் உயர்கல்வியில் சித்தியடைவார்கள். வெளிநாட்டுக் கல்வி வசதிகள் கிடைக்கும். பெரியோர்கள், குருமார்களின் உதவிகள் உங்களை வழிநடத்தும்.

இவர்களுக்கு 14 01 1982— 12—02—1982—14—03—1982 14—05—1982—15—06—1982 15—09—1982—17—08—1982 16—09—1982—16—12—1982 31—12—1982 வரைக்கும் அதிஷ்ட காலங்களாக கணிக்கப்படும்.

### மீனராசி

கற்பனை சக்தியும் கனவுலகத்திலும் சஞ்சரிக்கும் கடகராசிக்காரர் பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாவார்கள். தொழில் மாற்றங்கள் ஏற்படலாகும். யூரேனஸ் உங்கள்முன்னேற்றத்துக்கு உதவியாகவிருந்தாலும் சனி செவ்வாய் சேர்க்கை தடை தாமதங்களை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும். எதிரிகளாலும், பொறாமையாளர்களாலும் உங்கள் வெற்றி, புகழ் என்பன பாதிக்கப்படும். மனச் சந்தோஷம் இல்லாவிட்டாலும் தேகசுகம் நன்றாகவேயிருக்கும். தேவையற்ற அபிலாஷைகளும், கெட்ட சிந்தனைகளுமே உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்று கூறலாம்.

குடும்பத்தில் அமைதி நிலவினாலும், களத்திருத்துடன் மனவேறுபாடுகள் ஏற்படச் செய்யும். ஆகஸ்ட் மாதத்தின்பின்பு களத்திர சுகமேற்படும். புத்திர காரகன் வியாழன் கெட்டுப் போயிருப்பதால் புத்திர சுகம் எதிர்பார்ப்பதற்கில்லை. பொருள் பண்டங்கள், வாகனாதிகள் திருப்திகரமாகவிருக்கும். கட்டிட சம்பந்தமான விஷயங்களுக்கு அக்டோபர் மாதம் வரை நல்லதல்ல. பெரும் தோட்டச் சொந்தக்காரர்களும், விவசாயிகளும் எந்த வித லாபத்தையும் அனுபவிக்க முடியாது. தனவருவாய்சிறப்பாகவிருந்தாலும், ஏமாற்றுப் பேர்வழிகளாலும், போக்கிரிகளாலும் இடையிடையே நஷ்டங்கள் ஏற்படும்.

உத்தியோகத்திலிருப்பவர்கள் சுயகௌரவத்தையும், அந்தஸ்தையும் காப்பாற்ற கேதுவும், நெப்டியூனும் 10ல் இருப்பதால் உதவியாகவிருக்கும். சமூகத்தில் உங்கள் பெயர் மதிக்கப்படும், சர்வதேச வியாபாரம் லாபகரமாகவிருக்கும். குடும்பப் பெண்கள் கணவனுல் நன்மையடைய மாட்டார்கள். உணர்ச்சிவசப்பட்டு காரியத்தைக்கெடுத்துக்கொள்வீர்கள். கன்னிப் பெண்களுக்கும் நல்லதல்ல. சேவையிலுள்ள பெண்கள் தலைகுனிந்து நடத்தல் நன்மை பயக்கும். கல்வி கற்போர் சோம்பித் திரிவார்கள், மனதில் அமைதியிருக்காது. மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தாலே ஒழிய பரீட்சையில் சித்தியடைய முடியாது.

இவர்களுக்கு 01—01—1982 தொடக்கம் 15—01—1982 வரையும் 16—05—1982 தொ. 15—07—82வரையும்17 9 1982 தொ. 16—10—1982 வரையும் 16—11—1982 தொடக்கம் 15—12—1982 வரையும் அதிர்ஷ்ட காலங்களாகும்.

'விநாயகரை வணங்கினுல்

# பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கும்"

(மாவிட்டபுரம்)

''விஞ்ஞானிகளுக்கு அப்பாற்பட்டு ஒரு பொருள் ஒலித்துக்கொண்டிருப்பதை விஞ்ஞானிகளே ஒப்புக்கொள்கிறார்கள். அதுதான் ஓம் எனும் பிரணவம் எனச் சைவ சித்தாந்த ஞானிகள் கூறுகின்றனர். ஆகவே விஞ்ஞானத்தினுல்கூடக் காணமுடியாத அந்தப் பொருளை விநாயகப் பெருமானின் வடிவிலே ஆலயங்களில் நாம் காண்கிறோம். ஓம் என்னும் பிரணப் பொருளான விநாயகரை வணங்குவதன் மூலம் பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கும்.''

இவ்வாறு வர்த்தலைவிளான் விநாயகர் ஆலயத்தில் நடந்த விநாயகர் விரதப் பூர்த்தி விழாவில் சிறப்புரை ஆற்றிய பண்டிதை சிவபாக்கியம் பாலநாதன் கூறினார்

பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் விநாயகர் வழிபாடு நம் மத்தியில் மேலும் வேரூன்றவேண்டுமென கேட்டுக்கொண்டார். விசேஷ அபிஷேக ஆராதனைகள், கூட்டுப் பிரார்த்தனை ஆகியனவும் நடந்தன.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோருக்கு கிட்ட 3 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி (பனை, தென்னை, மா பயிர்களுடன்) கிளிநொச்சி, கண்டி வீதியில் வீடுகட்டக்கூடிய நிலமும் நெற்காணி $1\frac{1}{2}$ ஏக்கரும், (அரசாங்க உறுதிக்காணிகள்) விபரங்களுக்கு: எழுத்து மூலம் தொடர்பு கொள்க. மகாலட்சுமி புத்தகசாலை, மே/பா விளம்பரகாரர், சாவச்சேரி.

1917

### தேவை

மின் ஒட்டுனர் (Welder) வேலைக்கும், கடைச்சல் இயந்திர இயக்குனர் (Latl man) வேலைக்கும் ஆட்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். 138, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

1906

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

காரைநகர் கங்கைமதி சனசமூகநிலையத்தினரால் 9.1.1982 அன்று அதிர்ஷ்டம் பார்க்க இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு (நண்பர்களுக்கு மாத்திரம்) 14.4.1982 புது வருடத்தன்று நிலையத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

நிர்வாகம்

1910

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு

# "துவக்கு வெடிச்சத்தத்தைத் தொடர்ந்து ஆறு எதிரிகளும் வீட்டுக்கு வந்தனர்"

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

"சம்பவதினமிரவு ஆறு எதிரிகளும் துவக்குகளுடனும் ஆயுதங்களுடனும் வீட்டுக்குள் நுழைந்து அப்புத்துரை எனது மனைவிக்கு துவக்கால் சுட்ட போது எனது மனைவி கீழே விழுந்தார். நான் தட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினேன், வெடிச்சத்தம் தொடர்ந்தும் கேட்டது, வீட்டிலிருந்தோர் குளறியும் கேட்டது. பொலிசார் வந்தபின் திரும்பிவந்து பார்த்தபோது வீட்டிலிருந்த அறுவர் இறந்து கிடந்தனர்"

இவ்வாறு கம்பர்மலை துப்பாக்கிச்சூட்டு அறுவர் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்ட அறுவரின் குடும்பத்தலைவனை கந்தையா நாராயணசாமி குறிப்பிட்டார். இக்கொலை வழக்கு பருத்தித்துறை நீதி மன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டு வருகின்றது,

இக் கொலைவழக்கின் எதிரிகளில் துரைராசா, தேவராசா, அப்புத்துரை ஆகிய மூவரும் வல்லைவெளியில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டுவிட்டனர். ஏனைய எதிரிகளான மகேந்திரன், தில்லைநடராசா, தங்கராசா, இந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். வல்வெட்டித்துறைப் பொலிஸ் சார்பில் சார்ஜண்ட் பொன்னையாவும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தாணிகளான எம் வேலும்மயிலும் ஆர். டி. இரத்தினங்கம் ஆகியோரும் 2ம் 3ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மோதிலால் நேருவும், 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். கிருஷ்ணராசாவும் ஆஜராகியிருந்தனர். தொடர்ந்து சாட்சியமளித்த குடும்பத்தலைவர் நாராயணசாமி குறிப்பிட்டதாவது:

"கடந்த ஜூன் மாதம் 25ம் திகதி நான் அத்தியடி கம்பர்மலையிலுள்ள எனது வீட்டிலிருந்தேன். அதற்கு முதல்நாளான 24ம் திகதி எனது மகள் ஜெயநாயகவதிக்கு குழந்தையொன்று பிறந்த 31ம் நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. எனது மகள் ஜெயநாயகிவதி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இறந்துவிட்டார். ஜூன் மாதம் 25ம் திகதி எனது வீட்டில் மருமகன் யோகானந்தன், மகள் ஜெயநாயகவதி, அம்மா கே. அழகம்மா, மகள் ஜெயநாயகவிதி, மகள் காஞ்சனவதி, மகன் சாந்தேஸ்வரன், மருமகள் ரதி, மனைவி அழகம்மா ஆகியோர் இருந்தார்கள். சம்பவதினமிரவு எங்கள் வீட்டில் கே. அழகம்மா, வி. யோகானந்தன், ஜெயநாயகவதி, காஞ்சனதேவி, சாந்தேஸ்வரன் ஆகியோர் எனது வீட்டில் படுத்திருந்தார்கள். நானும் அங்கு தான் படுத்திருந்தேன்.

"எங்கள் வீட்டில் உள்ளவர்கள் எல்லோருக்கும் வீட்டில் இடமில்லாதபடியினாலேயே கருணேஸ்வரன் ரோகினி அம்மா வீட்டில் படுத்துவந்தார். ரோகிணி அம்மா சிறியதாய் முறையானவர். எனது தம்பியின் மனைவி.

"சம்பவதினமிரவு ஒன்பது மணியளவில் நான் இரவுச் சாப்பாட்டை முடித்தேன். இரவு நாங்கள் படுக்கைக்குப் போனபின்னர் துவக்கு வெடிச்சத்தமொன்று கேட்டது. நான் எழும்பிப் பார்த்தபோது படலையை யாரோ உதைப்பது தெரிந்தது. நான் யாரடா என்று கேட்டபொழுது படலையும் நிலத்தில் விழுந்துவிட்டது. துரைராசா, தேவராசா, தங்கராசா, அப்புத்துரை, மகேந்திரன் தில்லைநடராசா ஆகிய 6 எதிரிகளும் உள்ளே வந்தார்கள். அதில் மகேந்திரன், தில்லைநடராசா தங்கராசா ஆகியோர் இன்று மன்றில் இருக்கின்றார்கள். எதிரிகள் உள்ளே வந்தவுடன் அப்புத்துரை எனது மனைவிக்கு துவக்கால் வெடிவைத்தார். துவக்கு வெடிச்சத்தம் கேட்டதும் எனது மனைவி விழுந்துவிட்டார். நான் ஓடிவிட்டேன். அப்புத்துரை எனது மனைவிக்கு துவக்கால் வெடி வைக்கும்போது அவருடன் கூடவந்த ஏனைய எதிரிகள் ஒருவரோடு ஒருவர் முட்டிய வண்ணமிருந்தார்கள். இவர்கள் வந்ததை நான் கொட்டிலிலுள்ள அறைக்குள் நின்று பார்த்தேன்! அப்பொழுதே எனது மனைவிக்குச் சூடு விழுந்தது. நான் தட்டியைத் தூக்கி விட்டு ஓடிவிட்டேன், வீட்டிற்கு வந்த எதிரிகளில் அப்புத்துரை துரைராசா, தேவராசா ஆகிய மூவரினதும் கைகளில் துவக்குகள் இருந்ததைக்கண்டேன். மற்ற மூவரினதும் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. ஆனால் என்னென்ன ஆயுதங்கள் என்று சொல்ல முடியாது. நான் ஓடியபோது பொலிஸ்நிலையத்தை நோக்கி ஓடினேன், ஆனால் நான் பொலிஸ் நிலையத்திற்குப் போகவில்லை. இடையில் உறவினர் ஒருவர், பொலிசார் ஜீப்பில் சம்பவம் நடந்த இடத்திற்குப் போய்விட்டார்கள் என்று கூறியபடியால் நான் சம்பவ இடத்திற்குத் திரும்பிவந்தேன்.

---

# காற்சட்டை வாலிபர்கள் வகையாக மாட்டிக் கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

மரக்குற்றியோடு உரமும் ஏற்றிவந்த ஒரு லொறிச்சாரதியை மிரட்டி 300 ரூபா தரும்படி கேட்ட காற்சட்டை அணிந்த இரு வாலிபர்கள் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்,

யாழ்ப்பாணம் நோக்கிவந்த லொறியை மறித்து றிசேவ் பொலிசாகக் கடமையாற்றும் ஒருவர், ரூபா 300 தரும்படி லொறிச்சாரதி ராசேந்திரம் என்பவரிடம் கேட்டபொழுது சாரதி தந்திரமாகலொறியைச் செலுத்திச் சென்று கிளிநொச்சிப் பொலிசில் புகார்செய்தாராம். இதைத்தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிசார், மேற்குறிப்பிட்ட இருவரும் மேலும் ஒரு லொறியை மறித்து உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது கைது செய்து விசாரணைசெய்துவருவதுடன் இதுகுறித்து பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளனர்,

---

# இரவு நேரத்தில் ஆடு மாடுகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிராமத்தில் இரவு நேரங்களில் ஆடு, மாடுகள் களவாடப்படுவதாகப் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மிருகங்கள் களவாடப்பட்டு இறைச்சிக்குப் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இணுவில் 1500 ரூபா பெறுமதியான பசுமாடு, தாவடியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை என்பவரின் இரு மறி ஆடுகள் வேறுமிருவரின் ஆடுகள் களவாடப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

---

# யாருக்காக

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலுள்ள மக்களுக்கு சேவை செய்யக் கூடியதாக இருக்கும். இவ் அலுவலகம் அமைப்பதற்காக முன்னை நாள் வட்டுக்கோட்டைப்பிரதிநிதி அமரர் ஆ. தியாகராசா அவர்களின் பெருமுயற்சியினால் களபூமி பிள்ளையார் கோவிலடியில் 'வேலுப்பிள்ளை ஞாபகார்த்தக்கட்டிடம் ஒன்று கூட்டுறவுப் பண்டகசாலை வாசிகசாலை தபால் நிலையம் போன்றன அமைப்பதற்காக கட்டப்பட்டன மேற்படி கட்டிடத்தில் உபதபால் நிலையத்தைத் தவிர ஏனையவை தற்பொழுது இயங்கிவருகின்றன தபால்நிலையம் அமைப்பதற்காக கூட்டப்பட்ட அறை தற்பொழுது தபால் நிலையத்திற்காக காத்து இருக்கின்றது. தற்பொழுது களபூமியில் உள்ள மக்கள் ஒரு தந்தி அல்லது தந்திக்காசு கட்டளை அனுப்பவோ அன்றேல் மீளப்பெறவோ போவதென்றால் மூன்று மைல் தொலைவிலுள்ள காரைநகர் பிரதான தபால் நிலையத்தையோ அன்றேல் 2 மைல் தூரத்தில் உள்ள துறைமுகம் உபதபால் நிலையத்திற்கோ செல்லவேண்டியுள்ளது. காரணம் களபூமி உபதபால் நிலையம் ஏறக்குறைய 33 வருடங்களாக இயங்கிவந்தும் தொலைபேசி வசதியற்றதாக இருப்பதேயாகும் இதற்குப்பின்னர் உருவாக்கப்பட்டவலந்தலை துறைமுகம் போன்ற உபதபால் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்யப்பட்டு இருந்தும் களபூமி உபதபால் நிலையத்திற்கு தொலை பேசி வசதி செய்யாதது பெருங்குறையாகும்.

எனவே வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்,பெரும் பகுதி. தபால் தந்தி அத்தியட்சகரும் மற்றும் களபூமி வாழ் பெருமக்களும் மேற்படிதபால் நிலையத்தை தொலைபேசிவசதியுடன் களபூமி பிள்ளையார் காவிலடியில் அமைந்துள்ள வேலுப்பிள்ளை ஞாபகார்த்தக் கட்டிடத்தில் இடம்மாற்ற ஆவன செய்வார்களாக

சி சிவபாலன்

களபூமி, கரைநகர்.

---

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வழ. இல. ஈடு M/3565

கதிரவேலு சண்முகநாதன், கீரிமலை

வழக்காளி

எதிராக

கந்தையா கதிரமலை, மண்டுமண்டை, சண்டிலிப்பாய்

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 3565 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றத்தின் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1982 ம் ஆண்டு தை மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 4526—66 சதமும் மேலும் 3500/— ரூபாவும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 22% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1980—ம் ஆண்டு பங்குனி மாதம் 20—ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1980—ம் ஆண்டு மார்கழி மாதம் 12—ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 2201 65 (இதில் நடைபெற்ற செலவு ரூப 775 85 நடைபெறவேண்டிய செலவு ரூபா 650/50, மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 775/30) கொடுத்தல் வேண்டும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் பெரும்பிரிவு வலிகாமம் மேற்குப பகுதி சங்கானைக் கோவில்பற்று சங்கானை கிழக்கு இறை "தளச்சியோடை" நில பரப்பு மூன்றும் (03) மேற்கெல்லைக் காணியில் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு தம்பையா பெண் நாகம்மாவின் ஆதனமும், மேற்கு சொக்கலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனம், தெற்கு வழிவாய்க்கால் இவ்வெல்லைக்குட்பட்டவைகளுள் இதன் வடக்கெல்லையருகாக இதன் மேற்கெல்லைக் காணிக்கு இதன் கிழக்கெல்லை ஒழுங்கையிலிருந்து செல்லும் காற்பாதை பாவிப்புரித்தும் புறநீங்கலாக மிகுதி முழுவதும் அடங்கும்.

[illegible] எஸ் ஜே க்கிம,

நீதிமன்ற விற்பனைக் கமிஷனரும்

விலைமதிப்பாளரும்

"பதுவை",
பண்டத்தரிப்பு,
6—1—82.

(1919)

---

# ஆங்கில திருச்சபை ஆயர் யாழ். வருகிறார்

(அரியாலை)

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஆங்கில திருச்சபையின் சிரேஷ்ட அத்தியட்சகர் பேரருட் தந்தை ராபர்ட் ரண்சி ஆயர் கொழும்பு பௌத்த லோக மாவத்தையிலுள்ள கொழும்பு அத்தியட்சாதீன பேராலயத்தில் இம் மாதம் 14ந் திகதி வியாழக்கிழமை காலை திருநற்கருணை ஆராதனையை ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்துவார்.

இந்த ஆராதனையில் வடமாகாணத்திலுள்ள அங்கிலிக்கன் திருச்சபைக் குருமார்களும் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோரார்சிங்டன் அடிகளாரும் கலந்து கொள்ளுவார்கள். (அ)

---

# திருவடியே...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திருவருளே திருவடி யெனக் கண்டு "புவனியிற் சேவடி தீண்டினன் காண்க" என்றெல்லாம் பாடியருளிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையின் இறுதிப் பாடலில் திருவடியைப் போற்றி செய்யும் அமைவு சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும் அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்றும் அவர் திருவடி முதற்றே உலகங்கள் யாவும் என்றும் அவர் திருவடி அநாதிநித்தியமானவையென்றும் பாடியருளுவர். இன்னும் தோற்றமாம் என்று படைத்தலையும் போகமாம் என்று காத்தலையும் ஈறும் என்று அழித்தலையும் காணாதபுண்டரிகம் என்று மறைத்தலையும் ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் என்று அருளலையும் பாடியுள்ளார். திருவடிகள் உலக போகத்திற்கும் ஞான போகத்திற்கும் இன்றியமையாதவை. "சிதம்பர நடராசா மூர்த்திம் சிந்தயாமி"

---

# தொலைக்காட்சி ஏரியல் கொக்காவில் சென்னை

வருகிற மாதம் ஆரம்பமாகும் கொக்காவில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தற்சமயம் நடக்கும் பரீட்சார்த்த ஒலிபரப்பையும் பார்த்து மகிழ்வதற்குத் தேவையான தொலைக்காட்சி ஏரியலுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்.

**வீனஸ் றெகோடிங் றேடியோ வச் வேக்ஸ்,**

766/1 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாண

[illegible]

## ராணுவ முகாமில் கஞ்சா விற்க முயன்ருராம்

(சுண்டிக்குளி)

இராணுவ முகாமில் கஞ்சா வியாபாரம் செய்யச் சென்றதாகக் கூறப்படும் ஒருவரை இராணுவத்தினர் மடக்கிப் பிடித்து யாழ். பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

கஞ்சா பார்சலுடன் ராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட குருநகர்வாசியான கஜேந்திரன் (வயது 25) பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். விளையாட்டரங்கில் முகாமிட்டிருந்த ராணுவத்தினருக்கு மேற்படிநபர் கஞ்சா விற்றதாகவும் அவர்கள் குருநகர் முகர்முக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதைக் கேள்விப்பட்டு தனது வாடிக்கையாளர்களைத் தேடி அங்கு சென்றதாகவும் விசாரணையில் தெரிவித்துள்ளாராம்.


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன் ஞாயிறு**

**கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி**

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்**

**[1] ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

**[2] யாழ் மெட்டல் சேல்ஸ் சென்ரர்**
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

**[3] குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்**

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்**
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

**ரவிந்திரா ஸ்டோர்ஸ்**
285, காலி வீதி, வெள்ளவத்தை.

**லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்**
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

**ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்**
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

**நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்**
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**



**புது வருட நற்செய்தி !**

**உலகப் புகழ் பெற்ற உன்னத**

## SONY [சொனி]

இன்

ஏக விநியோகஸ்தர்களான

## சீடில்ஸ் சினிறேடியோ

## [SIEDLES CINERADIO]

யாழ்ப்பாணத்தில் புதிய கிளை திறந்துள்ளார்கள்

★ SONY — T. V. BLACK AND WHITE; Colour (சொனி டெலிவிஷன் — கறுப்பு-வெள்ளை; கலர்)

★ SIEDLES T. V. (சீடில்ஸ் டெலிவிஷன்)

★ மற்றும் பலவகை மின் உபகரணங்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய விற்பனை நிலைய முகவரி:-

**சீடில்ஸ் சினிறேடியோ**

**இல: 363, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**(SONy) 'சொனி.' தரத்தில் தனி**

1885


## பல்கலைக்கழகம் மூடப்பட்டது

காார்ட்டூம் ஜன.8

சூடானில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அங்குள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டது.

சூடான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாகவும், அங்கு பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதிப் பிரிவிடம் சூடான் பெரும் தொகையான பணத்தைப் பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது. (வெ)

## உளவுவேலைகளில் அமெரிக்கா

மாஸ்கோ, ஜன. 8

சோவியத் யூனியனுக்கு எதிராக நாசவேலைகளிலும், உளவுபார்க்கும் வேலைகளிலும் அமெரிக்கா ஈடுபட்டுவருவதாக சோவியத் பத்திரிகை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக கடந்த பத்தாண்டுகளில் பல அமெரிக்கர்கள் சோவியத் யூனியனிலிருந்துவெளியேற்றப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத்படைகளின் தலைவர்கள் அமெரிக்காவில் உளவுபார்க்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக அண்மையில் அமெரிக்கா தெரிவித்திருந்தது தெரிந்ததே. (வெ)

## ரூ. 24,000 கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

வீடொன்றுக்குள் நள்ளிரவு புகுந்த கொள்ளையர்கள் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி, உடுபிடவைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மன்னார் நானாட்டான் பகுதியிலுள்ள ரூபமலர் சேவியர் என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

## ரூ.1,00,000

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்துவந்த ஒரு பெண் கதவைத்தட்டி சத்தமிடவே கொள்ளையர்கள் பின்பக்கமாக கொள்ளைப் பொருட்களுடன் சைக்கிளில் ஓடித்தப்பிச் சென்றனரென்றும் கொள்ளையர்களில் இருவர் அரைக் காற்சட்டையும், ஒருவர் சாரமும், மற்றவர் நீளக்காற்சட்டையும் அணிந்திருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு, என். நவரெத்தினம் குற்றத் தடுப்புப் பிரிவுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நெவில் பெர்ணண்டோ தலைமையில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. குருப்பு, சார்ஜன்ட் ஜேசுதாசன் ஆகியோர் உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை செய்தனர்.

## லண்டன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை யாழ். நகருக்கு விஜயம் செய்கிறார்.

சம்பத்திரிசியார் கல்லூரிப் பாலர் பிரிவினருக்காகக் கட்டப்பட்ட அகஸ்டின் அடிகளாரின் பெயர்தாங்கிய இரண்டடுக்கு மாடியை திறந்து வைக்குமாறு கல்லூரி அதிபர் அருட்திரு. மைக்கல் ஜோசப் விடுத்த அழைப்பை ஏற்றே இவர் வருகைதருகிறார். இவ்வைபவம் நாளை மாலை நடைபெறவுள்ளத. (கி)

## இப்படியும் நடக்கிறது

உலகத்திலே மிகப்பயங்கரமான ஆயுதம் எது? அந்த ஆயுதத்தையே தூக்கி எறிந்துவிட்டனர் சீன இராணுவ வைத்தியர்கள்!

நீங்கள் நினைப்பதுபோல அந்த ஆயுதம் நிச்சயமாக 'நியூட்ரன்' குண்டு அல்ல! மறைந்துபோன கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பாடிவைத்த......நாக்குத்தான்.

சீனவைச் சேர்ந்த ஒரு பெண்ணின் நாக்கு புற்றுநோய் காரணமாக முற்றாக அகற்றப்பட்டு, அவரது கையிலிருந்து சத்திர சிகிச்சைமூலம் வெட்டப்பட்ட சதைத் துண்டினால் புதிய நாக்கு அப்பெண்ணுக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

ஷங்காய் ஆஸ்பத்திரியில் சீன இராணுவ வைத்தியர்கள் பதினறு மணிநேர சத்திர சிகிச்சைக்குப்பின்னர் இச்சாதனை ஏற்படுத்தப்யட்டுள்ளது. ஒரு மாதத்துக்குப் பின்னர் அப்பெண்ணால் பூரணமாகப் பேசமுடியுமென்று வைத்தியர்கள் உறுதியளித்துள்ளனர்!

— ஊடுருவி

## சென்.ஜோன்ஸ் மாடிக்கட்டிடம் பூர்த்தி

(அரியாலை) ரூபா பெறுமதியான 15 வகுப்
யாழ். பரி. யோவான் கல் பறைகளைக்கொண்ட மாடிக்
லூரியின் மத்திய பாடசாலைப் கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்
பிரிவுக்கு சுமார் 4 லட்சம் டுள்ளது.

## மரண அறிவித்தல்

### அரசகோன் சொலமன்

அரசகோன் சொலமன் காலமாகிவிட்டார். இவர் லீலாவின் அன்புக் கணவரும், இன்பஜோதி(நைஜீரியா) தர்மஜோதி (ஆசிரியை, இணுவில் அ. மி. த. க. பாடசாலை), சன்ஜீவனஜோதி (யாழ். அக்கடமி), ஜோதி மஹான் (ஹேலீஸ்), ஜோதீஸ்வரன் (சிட்டி வங்கி) ஆகியவர்களின் அருமைத் தந்தையும், தவரத்தினத்தின் (நைஜீரியா) மாமனாரும், கனம் பாலு சொலமனின் சகோதரரும், இராஜன் கதிர்காமர், அழகன் கதிர்காமர், பத்மா ஆனந்தராஜன், சீலன் கதிர்காமர், சீதா செல்லச்சந்திரன், கனம் சத்தியன் கதிர்காமர், குமாரன் கதிர்காமர், கனம் நேசன் கதிர்காமர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 9—1—82 சனிக்கிழமை பி. ப. 4—00 மணிக்கு ஈமைக்கிரியைகளுக்காக உடுவில் இல்லத்திலிருந்து மானிப்பாய்க்கு எடுத்துச் செல்லப்படும்.

மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம். 1925

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சோமசுந்தரம்

### (பொன்னையா மாஸ்ரர்)

திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம் (பொன்னையா மாஸ்ரர் இளைப்பாறிய வரைதல் ஆசிரியர், பரமேஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்) காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலம்சென்ற தியாகராசாவின் தம்பியும், டாக்டர் போதலிங்கம் (லண்டன்), ரத்தினேஸ்வரி, சற்குணேஸ்வரி, கோமதி (ஆசிரியை வத்தளை கொன்வென்ற்) டாக்டர் பத்மலிங்கம் [அமெரிக்கா) ஜெயலக்சுமி, சத்தியவதி [நைஜீரியா) கணேசலிங்கம் (பொறியியலாளர், லண்டன்], நிர்மலாதேவி (நைஜீரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாகிறெற் (லண்டன்), டாக்டர் பாலசிங்கம், குருநாதன் (சட்டத்தரணி), டாக்டர் குமாரசாமி (அரசாங்க பகுப்பாய்வாளர் (ANALYST) டாக்டர் ராஜேஸ்வரி (அமெரிக்கா), மயில்வாகனம் (பொறியியலாளர், பாறேயின்), புவனநாதன் (ஆசிரியர், நைஜீரியா) டாக்டர் தங்கேஸ்வரி (லண்டன்), சிறீகாந்தன் (பொறியியலாளர் நைஜீரியா) ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக யாழ்ப்பாணம் 13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு இன்று (9—1—82) காலை 9 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

1928

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News-Paper at the General P.O. Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.